தின கனி காலை நாளிதழ்
மாவட்டம் & தாலுகா வாரியாக நிருபர்கள் புகைப்பட கலைஞர்கள் தேவை
Call : 044-2272060 9443699066

admin@dhinakani.com
RNI-TNTAM/2023/88253

# நமது தின கனி

NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்

கனி பிரின்டிங்
DTP
நாளிதழ் வார இதழ் மாத இதழ்
சிறந்த முறையில் (DTP)செய்து தரப்படும்
நாளிதழ் மந்திலி மேகஸிங் குறைந்த விலையில் பிரின்டிங் செய்து தரப்படும்
தொடர்புக்கு : 94436 99066


மலர்:03 | இதழ்:247 | 4 பக்கங்கள் | 05:04:2026 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ,6 | வருடசந்தாரூ,1825



அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை
பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லாகி யாங்கு.

**விளக்கம்:**
பொருள்இல்லாதவர்க்கு இவ்வுலகத்து வாழ்க்கை இல்லாதவாறு போல உயிர்களிடத்தில் அருள் இல்லாதவர்க்கு அவ்வுலகத்து வாழ்க்கை இல்லையாம்.

## "எல்டிஎஃப் அரசை அகற்ற கவுன்டவுன் தொடங்கிவிட்டது" கேரளாவில் பிரதமர் மோடி பேச்சு



திருவல்லா(கேரளா):ஏப்,05
கேரளாவில் இடது ஜனநாயக முன்னணி (எல்டிஎஃப்) அரசாங்கத்தை அகற்றுவதற்கான கவுன்டவுன் தொடங்கிவிட்டது என்றும், பாஜக தலைமையிலான என்டிஏ கூட்டணி மாநிலத்தில் ஆட்சியை அமைக்கும் என்றும் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.பத்தினம்திட்டா மாவட்டத்தின் திருவல்லா நகரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் உரை நிகழ்த்திய பாஜக மூத்த தலைவரும், பிரதமருமான நரேந்திர மோடி, "கேரளா மிகுந்த திறனைக் கொண்டுள்ள போதிலும் வளர்ச்சிக்கான போட்டியில் அது மற்ற மாநிலங்களைவிட பின்தங்கியே இருக்கிறது.கேரளாவின் கிராமப்புறங்களில் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் குறைவாகவே உள்ளன. சிபிஎம் தலைமையிலான எல்டிஎஃப் கூட்டணியும், காங்கிரஸ் தலைமையிலான யுடிஎஃப் கூட்டணியும் போதிய கவனம் செலுத்தாததே இதற்குக் காரணம்.கிறிஸ்தவ மக்கள் கணிசமான எண்ணிக்கையில் வசிக்கும் வட கிழக்கு மாநிலங்களிலும் கோவாவிலும் எத்தகைய வளர்ச்சித் திட்டங்களை என்டிஏ மேற்கொண்டதோ அதேபோல, கேரளாவிலும் என்டிஏ வளர்ச்சியை உறுதி செய்யும்.கேரளாவில் பாஜக ஆட்சியில் இல்லாவிட்டாலும் மாநிலத்தின் வளர்ச்சிக்காக மத்தியில் உள்ள என்டிஏ அரசாங்கம் எந்த ஒரு முயற்சியையும் விட்டுவைக்கவில்லை. காங்கிரஸ் தலைமையிலான யுபிஏ ஆட்சிக் காலங்களைவிட கேரளாவின் வளர்ச்சிக்காக என்டிஏ அரசாங்கம் ஐந்து மடங்கு அதிக நிதியை செலவிட்டுள்ளது.மாநிலத்தில் உள்ள இடதுசாரி அரசாங்கம் சபரி ரயில் திட்டத்தை வேண்டுமென்றே தாமதப்படுத்துகிறது. இதனால் திருவல்லா மக்களுக்கு மிகப் பெரிய இழப்பு ஏற்பட்டுள்ளது. கேரளாவில் பாஜகவின் இரட்டை என்ஜின் அரசாங்கம் ஆட்சிக்கு வரும்போது அனைத்து தடைகளும் அகற்றப்படும்.எல்டிஎஃப் அரசாங்கத்துக்கு விடைகொடுக்க வேண்டும் என்ற வலுவான மனநிலை கேரளாவில் நிலவுவதை பாஜக தொண்டர்கள் உணர்த்துகின்றனர். எல்டிஎப் அரசாங்கத்தை அகற்றுவதற்கான கவுண்டவுன் தொடங்கிவிட்டது. பாஜக தலைமையிலான என்டிஏ கூட்டணி கேரளாவில் ஆட்சி அமைக்கும்'' என தெரிவித்தார்.

## மக்கள் பிரச்சினைகளை எழுப்பியது குற்றமா? - ஆம் ஆத்மி தலைமையிடம் ராகவ் சத்தா கேள்வி



புதுடெல்லி: ஏப்,05
நாடாளுமன்றத்தில் மக்கள் நலன் சார்ந்த பிரச்சினைகளை எழுப்பியது குற்றமா என்று ஆம் ஆத்மி தலைமையிடம் ராகவ் சத்தா கேள்வி எழுப்பி உள்ளார்.ஆம் ஆத்மியின் இளம் தலைவர்களில் ஒருவரான ராகவ் சத்தா, அந்த கட்சியின் மாநிலங்களவை துணைத் தலைவராக பதவி வகித்து வந்தார். அந்த பதவியில் இருந்து நேற்று முன்தினம் அவர் நீக்கப்பட்டார். அவருக்குப் பதிலாக புதிய துணைத் தலைவராக அசோக் மிட்டலை ஆம் ஆத்மி தலைமை நியமித்து உள்ளது.ஆம் ஆத்மி தேசிய ஒருங்கிணைப்பாளர் அர்விந்த் கேஜ்ரிவால் கடந்த 2024-ம் ஆண்டில் கைது செய்யப்பட்டபோது கட்சியின் சார்பில் பல்வேறு போராட்டங்கள் நடைபெற்றன. இதில் ராகவ் சத்தா பங்கேற்கவில்லை. கடந்த பிப்ரவரியில் மதுபான கடைகள் ஒதுக்கீட்டு வழக்கில் இருந்து அவர் விடுதலை செய்யப்பட்டார். இதுதொடர்பாகவும் ராகவ் சத்தா எவ்வித கருத்தையும் தெரிவிக்கவில்லை. நாடாளுமன்றத்தில் ஆம் ஆத்மி சார்பான கருத்துகளை அவர் எடுத்துரைக்கவில்லை. இதன் காரணமாகவே மாநிலங்களவை துணைத் தலைவர் பதவியில் இருந்து அவர் நீக்கப்பட்டார் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.இதுகுறித்து ராகவ் சத்தா நேற்று வெளியிட்ட வீடியோவில் கூறியிருப்பதாவது: மாநிலங்களவையில் மக்கள் நலன் சார்ந்த பிரச்சினைகளை எழுப்பினேன். இது ஒரு குற்றமா? அவையில் நான் பேசக்கூடாது என்று ஆம் ஆத்மி சார்பில் மாநிலங்களவை செயலாளரிடம் கடிதம் அளிக்கப்பட்டு உள்ளது. நான் சாமானிய மக்களுக்காக குரல் கொடுக்கிறேன். நான் பேசக்கூடாது என்று தடுப்பது ஏன்?விமான நிலையங்களில் கூடுதல் விலைக்கு உணவு பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. டெலிவரி ஊழியர்கள் பல்வேறு பிரச்சினைகளை சந்தித்து வருகின்றனர். உணவு பொருட்களில் கலப்படம் அதிகரித்து வருகிறது. சுங்கச்சாவடி கொள்ளை முதல் வங்கிக் கொள்ளை வரை அனைத்து பிரச்சினைகளையும் மாநிலங்களவையில் எழுப்பி வருகிறேன்.தொலைத்தொடர்பு நிறுவனங்கள் ஓராண்டில் 12 மாதங்களுக்குப் பதில் 13 மாதங்களுக்கான கட்டணத்தை மக்களிடம் வசூலிக்கின்றன. ரீசார்ஜ் செய்யவில்லை என்றால் அழைப்புகள் நிறுத்தப்படுகின்றன. இதுபோன்ற மக்கள் நலன் சார்ந்த பிரச்சினைகளுக்காக தொடர்ந்து குரல் எழுப்பி வருகிறேன். இதனால் ஆம் ஆத்மிக்கு என்ன பாதிப்பு ஏற்பட்டது. எனது குரலை ஒடுக்க சிலர் விரும்புகின்றனர். எனது மவுனத்தை தோல்வியாக கருத வேண்டாம். நான் நதி போன்றவன். நான் ஆர்ப்பரித்தால் மிகப்பெரிய வெள்ளப்பெருக்கு ஏற்படும். இவ்வாறு ராகவ் தெரிவித்துள்ளார்.

## நிர்வாகிகள் தேர்தல் பணிகளை புறக்கணித்ததால் தனியாக பிரச்சாரத்தில் ஈடுபட்ட திருத்தணி தவெக வேட்பாளர்



திருத்தணி:ஏப்,05
திருத்தணி தவெக நிர்வாகிகள், தொண்டர்கள் தேர்தல் பணிகளை புறக்கணித்ததால், திருத்தணி தவெக வேட்பாளர் சத்யகுமார் தன்னந்தனியாக தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டதால், பரபரப்பு ஏற்பட்டது. திருத்தணி சட்டப்பேரவை தொகுதி வேட்பாளரான, தவெக தேசிய செய்தி தொடர்பாளர் சத்யகுமார், சில தினங்களுக்கு முன் திருத்தணி நகருக்கு வந்தார். அப்போது ஆர்வத்துடன், தொகுதியின் கட்சி நிர்வாகிகள் சத்யகுமாரை சந்திக்க வந்தனர். அப்போது வேட்பாளர் சத்யகுமார், நிர்வாகிகளை மதிக்காமல் தகாத வார்த்தைகளால் பேசியதாக கூறப்படுகிறது. இதனால் சத்யகுமார் மீது அதிருப்தியில் இருக்கும் தொகுதியை சேர்ந்த தவெக நிர்வாகிகள், சத்யகுமாரை மாற்றி வேறு வேட்பாளரை கட்சி தலைமை அறிவிக்க கோரி, தேர்தல் பணிகளை புறக்கணித்து வருகின்றனர். தவெக வேட்பாளர் சத்யகுமார் வேட்பு மனு தாக்கல் செய்ய எதிர்ப்பு தெரிவித்து, திருத்தணி கோட்டாட்சியர் அலுவலகம் அருகே சென்னை - திருப்பதி தேசிய நெடுஞ்சாலையில் 50-க்கும் மேற்பட்ட தவெகவினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். நேற்று முன்தினம் மதியம் 2.45 மணியளவில் தவெக வேட்பாளர் சத்யகுமார், மாவட்ட செயலாளர் டில்லிபாபு மற்றும் கட்சியின் முக்கிய நிர்வாகி களை கூட அழைத்து செல்லாமல் தனியாக திருத்தணி கோட்டாட்சியர் அலுவலகத்துக்கு சென்று வேட்புமனு தாக்கல் செய்தார். இந்நிலையில், தவெக வேட்பாளர் சத்யகுமார் நேற்று திருத்தணி நகரில், கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் யாரும் இல்லாமல் தன்னந்தனியாக தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். அப்போது, அவர் பைபாஸ் சாலை உள்ளிட்ட பகுதிகளில் தனியாக நடந்து சென்று, தேநீர் கடைகள், பெட்ரோல் பங்க் மற்றும் சாலையில் நடந்து சென்றவர்களிடம் விசில் சின்னத்துக்கு வாக்களிக்குமாறு பிரச்சாரம் செய்தார். இதனால், திருத்தணியில் பரபரப்பு ஏற்பட்டது.

## "திமுக - காங்கிரஸ் கூட்டணி ஒரு குழப்ப அணி" - விஜய் விமர்சனம்



சென்னை: ஏப்,05
தமிழ்நாட்டிலும் திமுக - காங்கிரஸ் குழப்ப அணியாகத்தான் இருக்கிறது.. புதுச்சேரியிலும் அதேபோல் குழம்பிப்போன அணியாக தான் இருக்கிறது என தவெக தலைவர் விஜய் தெரிவித்துள்ளார். புதுச்சேரியில் தவெக தலைவர் விஜய், பரப்புரை செய்தார். அப்போது அவர் பேசும்போது, "புதுச்சேரியில் தவெக போட்டியிடுகிறது. நமது கூட்டணி கட்சியான நேயம் மக்கள் கழகம் உருளையன்பேட்டை மற்றும் தட்டாஞ்சாவடி ஆகிய இரண்டு தொகுதிகளில் போட்டியிடுகின்றது. மக்களுடன் மக்களாக இருப்பவர்களைத் தான் நமது கட்சியின் வேட்பாளர்களாகத் தேர்வு செய்துள்ளேன். நமது வேட்பாளர்களை வெற்றி பெற வைக்க உங்கள் அனைவரையும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். காங்கிரஸ் கூட்டணி 5, 6 முறை ஆட்சியில் இருந்தது. அந்த கூட்டணியில் இருந்த ஒரு தலைவர் மக்களை மட்டும் ஏமாற்றவில்லை, அவரது தலைவரையே எப்படி ஏமாற்றினார் என்பதை உலகமே பார்த்து சிரித்தது. தற்போது அந்தக் கட்சி இப்போது எந்த நிலையில் இருக்கிறது என்பது உங்களுக்கே தெரியும். தமிழ்நாட்டிலும் திமுக - காங்கிரஸ் குழப்ப அணியாகத்தான் இருக்கிறது. புதுச்சேரியிலும் அதேபோல் குழம்பிப்போன அணியாக இருக்கிறது. மற்றொரு கூட்டணி, பாஜக, என். ஆர் காங்கிரஸ் கூட்டணி. அவர்கள் சேர்ந்து நிற்க முடியாமல், சோர்ந்து நிற்கும் கூட்டணி. கூட்டணி இருக்கிறது என ஒரு பக்கம், கூட்டணி இல்லை என மற்றொரு பக்கம் செய்திகள் வெளியாகின. இதில் நம்மை வைத்து ஒரு அரசியலும் செய்தனர். இங்கு மற்றொரு அரசியல் வியாபாரமும் நடக்கிறது. தமிழகத்தில் எப்படி இரண்டு பேர் சீக்ரெட் கூட்டணி வைத்து இருக்கிறார்களோ அதே பார்முலா தான் புதுச்சேரியிலும். நம்மை பற்றி தவறாக கதை கூறினார்கள். தற்போது என்ன ஆயிற்று, நாம் தனியாக நிற்கும் போது நாம் யாரிடமும் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஒட்டி உறவாடவே இல்லை என்பது தெரிந்து விட்டது. தவெக மக்கள் பக்கம் நிற்கிறோம். மக்களும் தவெக பக்கள் நிற்கிறார்கள். காங்கிரஸ்-பாஜக ஆகிய இரண்டு கூட்டணியில் உள்ள கட்சிகளும் ஒன்றியத்திலும் ஆட்சியில் இருந்தவர்கள் தான். புதுச்சேரி மக்களின் மாநில அந்தஸ்து கோரிக்கை பல வருடங்களாக இருக்கிறது. அதை காங்கிரஸ் மற்றும் பாஜக அரசாங்கங்கள் நிறைவேற்றவில்லை. 20 வருடங்களுக்கு முன்பு சுஷ்மா ஸ்வராஜ் சொன்னபோதும் ஏன் புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து கிடைக்கவில்லை? இந்த ஒரு கேள்விக்கு காங்கிரஸ்-திமுக கூட்டணியோ, பாஜக கூட்டணியோ பதில் சொல்வார்களா? நேரடியாக கேட்கிறோம் மனசாட்சி இருந்தால், மக்கள் மீது அக்கறை இருந்தால் இந்த கோரிக்கையை ஏன் இவ்வளவு காலமாக இழுக்கிறீர்கள் என பதில் சொல்லுங்கள்.தீய சக்தி திமுக இருக்கிற காங்கிரஸ் கூட்டணியும் வேண்டாம். பாஜக கூட்டணியும் வேண்டாம். தமிழகத்தில் தவெக ஆட்சிதான் அமைய வேண்டும். புதுச்சேரியிலும் தவெக ஆட்சிதான் அமைய வேண்டும். விசில் புரட்சியை ஏற்படுத்த விசில் சின்னத்துக்கு ஓட்டு போடுங்கள். தேர்தல் என்பது மக்கள் சம்பந்தப்பட்டது. இங்கே ஏற்கனவே அரசியலில் இருப்பவர்கள் மக்கள் கேள்விகளுக்கு பதில் சொல்வதில்லை. சிறுபான்மை மக்கள் உள்ளிட்ட அனைத்து சகோதரர்களுக்கும் பாதுகாப்பு வேண்டும். திமுக கூட்டணியில் பெயருக்கு இருக்கும் காங்கிரஸூம் சரி, பாஜக கூட்டணியில் நிர்பந்தத்தால் சேர்ந்திருப்பவர்களுக்கும் சரி, ஒருத்தரை ஒருத்தர் விழுங்கி ஏப்பம் விடப்பார்க்கும் இந்த இருகூட்டணியும் உங்களுக்கு ஒன்றும் செய்ய மாட்டார்கள். உங்களுக்கு நல்லாட்சி நம்பிக்கையான ஆட்சி வேண்டும் என்றால் தவெகவுக்கு வாக்களியுங்கள்'' இவ்வாறு அவர் பேசினார்.இதனிடையே, புதுச்சேரியில் ரேஷன் கடைகளே இல்லை என கடந்த முறை பேசியதை குறிப்பிட்டு, பேசிய விஜய், நான் தெரியாமல் பேசியதாகவே வைத்துக் கொள்ளுங்கள். புதுச்சேரியில் பொது விநியோகம் முழுமையாக இல்லாதது குறித்த பத்திரிகை செய்திகளுக்கு பதில் என்ன என கேள்வி எழுப்பினார்.வாக்குறுதிகள்: துணைநிலை ஆளுநரின் தலையீடு இல்லாத முழுமையான மாநில அந்தஸ்தைப் பெற சட்டப்படி 100% முயற்சிப்போம். தவெக ஆட்சிக்கு வந்த ஆறு மாதங்களில் உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்படும். ரூ.25 ஆயிரம் மகப்பேறு உதவித் தொகையாக வழங்கப்படும். அனைத்து அரசு காலி பணியிடங்களும் நிரப்பப்படும். 100 சதவிகிதம் பயிர் காப்பீடு தரப்படும். ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூ.25 லட்சம் மருத்துவ காப்பீடு வழங்கப்படும். வறுமை கோட்டுக்கு கீழ் உள்ள குடும்பங்களுக்கு 200 யூனிட் வரை கட்டணம் இல்லா மின்சாரம் வழங்கப்படும் உள்ளிட்ட வாக்குறுதிகளை அளித்துள்ளார்.

## சிலிண்டர் குடோனில் பயங்கர வெடி விபத்து.. 4 பேர் பலி



இந்தியாவில் தாத்ரா மற்றும் நகர் ஹவேலி யூனியன் பிரதேசத்தில் உள்ள சில்வாசா நகரில் தொழிற்பேட்டை அமைந்துள்ளது. இங்கு கியாஸ் சிலிண்டர் குடோன் செயல்பட்டு வந்தது. இந்த குடோனில் நேற்று (ஏப்.4) சிலிண்டருக்கு நியூட்ரியன் கியாஸ் நிரப்பிம் பணிகளும் நடைபெற்றுள்ளது. அப்போது ஏற்பட்ட வெடி விபத்தில், குடோனில் பணியாற்றிய 4 பேர் உயிரிழந்தனர். மேலும், 2 பேர் படுகாயமடைந்தனர். இந்த தீ விபத்துக்கான காரணம் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## 2026 சட்டமன்றத் தேர்தல்113 திருப்பூர் வடக்கு சட்டமன்ற தொகுதி



திருப்பூர்:ஏப்05
திருப்பூர் மாவட்டம் திருப்பூர் வடக்கு வட்டத்தில் இயங்கி வரும் திருப்பூரில் சிறந்த கிரிக்கெட் அகடமியான சூரிஸ் கிரிக்கெட் அகாடமியில் மாவட்ட மற்றும் மாநில அளவிலான விளையாண்டு வரும் விளையாட்டு வீரர்கள் மற்றும் இளம் விளையாட்டு வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் விளையாட்டு வீரர்களின் பெற்றோர் ஆகியோர்களுக்கு திருப்பூர் வடக்கு வட்டத்தில் 100 சதவீதம் வாக்களிப்பது தொடர்பாக துண்டு பிரசுரம் கொடுத்து மற்றும் வீடியோ பதிவுகள் மேற்கொண்டு வாட்ஸ்அப், பேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம் ஆகியவற்றில் பகிர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். நில வருவாய் ஆய்வாளர் வேலம்பாளையம் உள் வட்டம்





மதுரை மாநகர் புது ராமநாதபுரம் ரோடு பழைய மீனாட்சி நகர் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் ஸ்ரீ கருமாரியம்மன் திருக்கோவில் 46வது ஆண்டு திருவிழா கடந்த 29ஆம் தேதி துவங்கியது. அதனைத் தொடர்ந்து 1ம் தேதி அம்மன் கூழ் ஊற்றும் நிகழ்வு நடைபெற்றது தொடர்ந்து உலக நன்மை வேண்டியும் மழை பெய்ய வேண்டியும் கல்வி மேம்படவும் விவசாயம் செழிக்கவும் பூஜை நடைபெற்றது இதில் அப்பகுதியை சேர்ந்த பெண்கள் பலர் கலந்து கொண்டு திருவிளக்கு ஏற்றி தரிசனம் செய்தனர். மேலும் முக்கிய நிகழ்வான பால்குடம் தீச்சட்டி அக்னி சட்டி உள்ளிட்ட நேத்து கடன் நிகழ்வுகள் நடைபெற்றன இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு நேர்த்திக் கடனை செலுத்தினர். தொடர்ந்து அம்மனுக்கு சிறப்பு அலங்காரமும் விசேஷ பூஜைகளும் நடைபெற்றன நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவில் நிர்வாகம் மணிகண்டன் தலைமையில் விழா குழுவினர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

### கள்ளக்குறிச்சி மாவட்டத்தில்

## மகளிர் சுய உதவிக்குழுவினர் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி கைகளில் மருதாணி வரைந்து வாக்காளர் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்

### மாவட்ட ஆட்சித்தலைவர் எம். எஸ். பிரசாந்த் தகவல்

கள்ளக்குறிச்சி, ஏப். 05– கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டாரத்தில் மகளிர் சுய உதவிக்குழுவினர் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி கைகளில் மருதாணி வரைந்து வாக்காளர் விழிப்புணர்வு 03.04.2026 அன்று ஏற்படுத்தினர்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 100 சதவீதம் வாக்குப்பதிவை ஏற்படுத்தும்கையில் பல்வேறு துறைகளின் சார்பில் வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடைபெற்று வருகிறது.



அந்த வகையில் உளுந்தூர்பேட்டை வட்டாரத்தில் மகளிர் சுய உதவிக்குழுவினர் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி கைகளில் மருதாணி வரைந்து வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் அனைத்து வாக்காளர்களும் சட்டமன்றத் தேர்தலில் 100 சதவீத வாக்குப்பதிவு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இதன் மூலம் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக்குழுவினர் மூலம் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு பொதுமக்களுக்கு 100 சதவீதம் வாக்களிப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது என மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ். பிரசாந்த் தெரிவித்தார்.

## வாணக்கன்காடு கோடைகால சிலம்ப பயிற்சி வகுப்புகள் துவக்க விழா

கறம்பக்குடி, ஏப். 05– புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி வட்டம் வீரக்குடிநாடு வாணக்கன் காடு அம்மன் திடலில் அம்மன் இளைஞர் மன்றம் மற்றும் ஊர் பொதுமக்கள் இணைந்து நடத்தும் கோடைகாலசிறப்புபயிற்சி வகுப்புகள் தொடக்க விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.



சிலம்பு பயிற்சி நன்மைகள்: சிலம்பம் என்பது தமிழ்நாட்டின் பாரம்பரிய தற்காப்புக் கலையாகும். தமிழ் சங்க இலக்கியங்களில் சிலம்பக் கலை பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இது மூங்கில் குச்சிகள் மூலம் பயிற்சி செய்யப்படுகிறது. சிலம்பப் பயிற்சி செய்வது உடல், மனம் மற்றும் கலாசார நன்மைகளை வழங்குகிறது.

சிலம்பம்விளையாடுவது ஆரோக்கியம், உடல் வலிமை, நெகிழ்வுத் தன்மை மற்றும் உடல் இயக்கங்கள் நன்றாக நடைபெறுவதற்கு உதவுகிறது. சிலம்பக் கலையை பயிற்சி செய்யும்போது உடல் இயக்கங்களுக்கு துல்லியம் மற்றும் சமநிலை தேவைப்படுகிறது. இது ஒட்டுமொத்த உடல் உறுப்புகளின் ஒருங்கிணைப்பை மேம்படுத்த உதவுகிறது.

வழக்கமான சிலம்பப் பயிற்சி உடலின் பல்வேறு பகுதிகளில் தசை வளர்ச்சியை வலியுறுத்துகிறது. 'மசில் டோன்' எனப்படும் சிறந்த தசை தொனியைத் தருகிறது மற்றும் உடல் கட்டுக்கோப்பாக விளங்க உதவுகிறது.

சிலம்பம் விளையாடுவதன் மூலம் உடல் சுறுசுறுப்பாகவும் அனிச்சையாகவும் செயல்பட உதவுகிறது. இதுபல்வேறு உடல்செயல்பாடுகளுக்கும் நன்மை பயப்பதாக இருக்கிறது.

நிகழ்ச்சியின் வரவேற்புரை எஸ் கார்த்திக், முன்னிலை ஜி.விஸ்வநாதன் நிகழ்ச்சிக்கு தலைமை முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ரவிச்சந்திரன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ராஜேஸ்வரி மதியழகன், சிலம்பத்தை வீரர்களுக்கு வழங்கியவர் ராமரங்கசாமி, தலைமை பயிற்சியாளர் விக்னேஸ்வரன், துணை பயிற்சியாளர் பி ஆர் சந்தோஷ், நிகழ்ச்சி நடத்துபவர்கள் அம்மன் இளைஞர் மன்றம் மற்றும் ஊர் பொதுமக்கள் ஜல்லிக்கட்டு குழு, வெளிநாடு சிங்கைவாழ், நண்பர்களால் நடத்தப்படுகின்றன.



காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையில் விடுதலை சிறுத்தை கட்சியின் காஞ்சிபுரம் மாவட்ட செயலாளர் லூ. அருள்நாதன் பிறந்தநாளை ஒட்டி சிறப்பு ரத்ததான முகாம் நடைபெற்றது. காஞ்சிபுரம் விடுதலை சிறுத்தை கட்சியின் மாவட்ட செயலாளர் அருள் நாதன் பிறந்தநாளை பற்றி ஒவ்வொரு ஆண்டும் சிறப்பு ரத்ததான முகாம் நடைபெறுவது வழக்கம் அந்த வகையில் அரசு மருத்துவமனையில் ரத்ததான முகாம் நடைபெற்றது. இதில் நூற்றுக்கும் மேற்பட்டோர் ஆர்வத்துடன் கலந்து கொண்டு ரத்ததானம் வழங்கினர் இதில் ஏ வி ஆர் கோபி இளைஞர் அணி ரமேஷ் ஒன்றிய செயலாளர் இளமாறன் கார்த்திக் விஜி விக்கி சந்துரு நவீன் குமார் அஜித் கலியனூர் கிரி பாக்யராஜ் விக்ரம் மகேஷ் வெற்றி வேல் ஹரிஷ் ஹரி ஜீவானந்தம் சுதன் மற்றும் ஓரிக்கை உமேஷ். மதன் நவீன் சாலபோகம் சுபாஷ் உள்ளிட்டோர் கலந்துகொண்டு ரத்ததானம் வழங்கினர் கலந்து கொண்டு ரத்ததானம் வழங்கி அவர்களுக்கு மாவட்ட செயலாளர் லூ .அருள்நாதன் சான்றுகள் வழங்கினார். தொடர்ந்து கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்தார்.

## தேர்தலில் 100 சதவிகிதம் வாக்குப்பதிவு குறித்து மலைகிராமங்களான தொட்டமஞ்சி மற்றும் பெட்டமுகிலாளம் ஊராட்சிகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சி

கிருஷ்ணகிரி, ஏப். 05– தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 நடைபெறுவதை முன்னிட்டு, கிருஷ்ணகிரி மாவட்டம், 56.தளி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, மலை கிராமமான பெட்டமுகிலாளம் ஊராட்சியில், வாக்காளர்கள் தேர்தலில் 100 சதவிகிதம் வாக்களிப்பதன் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில், தளி சட்டமன்ற தேர்தல் நடத்தும் அலுவலர்.பழனி வாக்காளர்களிடம் கலந்துரையாடினார்.




அதனை தொடர்ந்து தளி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மலைகிராமமான தொட்டமஞ்சி ஊராட்சிகளில் தனி வட்டாட்சி கவாஸ்கர் மற்றும் ஆராதனா தொண்டு நிறுவனம் சார்பாக வாக்களர்களுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கி விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொண்டனர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 நடைபெறுவதை முன்னிட்டு, கிருஷ்ணகிரி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார் தலைமையில், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளில், 100 சதவிகிதம் வாக்கு பதிவு குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், கையெழுத்து இயக்கம், உறுதிமொழி, விழிப்புணர்வு பேரணி, ஒட்டுவில்லைகள், எல்.இ.டி. வாகனம் மூலம் வாக்களிப்பதன் அவசியம் குறித்த குறும்படங்கள் ஒளிபரப்பு, இருசக்கர வாகன பேரணி, கோலப் போட்டி, பேச்சுப்போட்டி, ஓவியப்போட்டிகள், செல்பி பாயிண்ட், விழிப்புணர்வு முத்திரை, சிறுதானிய விதைகள் கொண்டு தேர்தல் விழிப்புணர்வு வாசகம் என பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் 56.தளி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, மலைகிராமத்தை சேர்ந்த வாக்காளர்கள் 100 சதவிகிதம் வாக்களிக்கும் பொருட்டு பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. மலை கிராமங்களில் உள்ள வாக்கு சாவடி மையங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனை தொடர்ந்து தளி சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் பழனி தேன்கனிக்கோட்டை வட்டம், பெட்டமுகிளாலம் ஊராட்சிக்குட்பட்ட பழங்குடியினமக்கள் வசிக்கும் மலை கிராமமான உள்ள ஆலப்பட்டி அரசு ஒன்றிய துவக்கப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு சாவடி மையத்திற்கு 14 கி.மீ. நடத்து சென்று வாக்கு சாவடி மையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அடிப்படை வசதிகளை ஆய்வு மேற்கொண்டார்.

கடைக்கோடி மலைக்கிராமமான ஆலப்பட்டி கிராமத்தில் மொத்தம் உள்ள 117 வாக்காளர்கள் தங்கள் பகுதிலேயே எவ்வித சிரமமின்றி வாக்களிக வசதியாக ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் வாக்கு சாவடி மையம் அமைக்கப்பட்டுள்ளது. எனவே இக்கிராமத்தில் உள்ள வாக்காளர்கள் அனைவரும் 100 சதவிகிதம் தவறாமல் தங்கள் வாக்குகளை பதிவு செய்ய வேண்டும் என பழங்குடியின மக்களை கேட்டுக்கொண்டார்.

மேலும் தனி வட்டாட்சி கவாஸ்கர் தலைமையில் வாக்குசாவடி மைய அலுவலர்கள் மற்றும் ஆராதான தொண்டு நிறுவன பிரதிநிதிகள், தளி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, அஞ்செட்டி வட்டம், கடைக்கோடி மலைகிராமமான தொட்டமஞ்சி ஊராட்சியில் வசிக்கும் மலைவாழ் மக்கள், பழங்குடியின மக்களிடம் 100 சதவிகிதம் வாக்கு பதிவு குறித்து துண்டு பிரசுரங்களை வழங்கி வாக்காளர்களிடம் கலந்துரையாடினர். தொடர்ந்து மலைகிராமத்தில் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் தேன்கனிக்கோட்டை வட்டாட்சியர் செல்வி, கங்கை, அஞ்செட்டி வட்டாட்சியர் பாலாஜி மற்றும் துணை வட்டாட்சியர்கள் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 முன்னிட்டு அரசியல் விளம்பரங்கள். கட்டண செய்தி வெளியிடுதல் மற்றும் வாக்குப்பதிவு.வாக்குஎண்ணும்மையங்களில்ஊடகங்கள்பின்பற்றவேண்டியவழிமுறைகள்குறித்தஆலோசனைக்கூட்டம் மாவட்டதேர்தல்அலுவலர் / மாவட்டஆட்சித்தலைவர்வே.இரா.சுப்புலெட்சுமி, தலைமையில்நேற்று ஆட்சியர்அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட வருவாய் அலுவலர் மா. சிவசுப்பிரமணியன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) பாஸ்கரன், சிறப்பு துணை ஆட்சியர் (முத்திரைத்தாள்) ரமேஷ்குமார், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் அ.கதிரவன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 23.04.2026 அன்று சட்டமன்ற பொதுதேர்தல் நடைபெறுவதையொட்டி, தேர்தல் விழிப்புணர்வு LED வாகனத்தினை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ்.மாலதி ஹெலன் நேற்று கொடியசைத்து துவக்கிவைத்தார்.இதில் மாவட்ட வருவாய் அலுவலர் ம.கணேஷ்குமார், துணை ஆட்சியர் (பயிற்சி) மணியரசன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

## தேர்தல் பறக்கும் படைகள் அமைக்கப்பட்டு சுழற்சி முறையில் 24 மணிநேரமும் கண்காணிப்பு பணி

### விழுப்புரம் மாவட்ட கலெக்டர் தகவல்

விழுப்புரம், ஏப். 05– விழுப்புரம் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் ஷேஷேக் அப்துல் ரஹ்மான்,விடுத்துள்ள செய்தி குறிப்பில் தெரிவித்ததாவது, தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 முன்னிட்டு விழுப்புரம் மாவட்டத்தில் 63 தேர்தல் பறக்கும் படைகள் மற்றும் 63 நிலை கண்காணிப்புக் குழுக்கள் என 126 குழுக்கள் அமைக்கப்பட்டு சுழற்சி முறையில் 24 மணி நேரமும் கண்காணிப்புபணியில் ஈடுபட்டு வருகிறார்கள். மேலும் பல்வேறு துறைகளில் குழுக்கள் அமைக்கப்பட்டு கண்



காணிப்பு பணியில் ஈடுப்பட்டு வருகிறார்கள்.

இக்குழுக்கள் வாகன தணிக்கை, தேர்தல் முறைகேடுகளை கண்காணித்தல் மற்றும் புகார்கள் மீது நடவடிக்கை எடுத்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள். இக்கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டுவரும் குழுக்கள் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 03.04.2026 அன்று வரையில் தேர்தல் பறக்கும் படைகள் மற்றும் நிலை கண்காணிப்புக் குழுக்கள் ஆகியவற்றால் ரூ. 69,77,963 மதிப்பிலான ரொக்கப் பணம், மதுபானங்கள், போதைப்பொருட்கள் மற்றும் இதர பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளது. மேலும் காவல்துறையின் மூலம் ரூ. 15,78,941 மதிப்பிலான ரொக்கப் பணம், மதுபானங்கள், போதைப் பொருட்கள் கைப்பற்றப் பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 தேதி அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 03.04.2026 அன்று வரை தேர்தல் பறக்கும் படைகள் மற்றும் நிலை கண்காணிப்புக் குழுக்கள் ஆகியவற்றால் கைப்பற்றப் பட்ட இனங்களில் தகுந்த ஆவணங்கள் சமர்ப்பிக்கப் பட்டதன் பேரில் ரூ.43,73,020/ மதிப்பிலான ரொக்கப்பணம் மற்றும் இதர பொருட்கள் விடுவிக்கப்பட்டு உரிமைதாரர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர், விடுத்துள்ள செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கன்னியாகுமரி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா (04.04.2026) அன்று பள்ளம்துறை மீனவர்களிடம் தேர்தல் நாளன்று அனைவரும் வாக்களித்து ஜனநாயக கடமையை ஆற்ற வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

# கள்ளக்குறிச்சி மாவட்டத்திலுள்ள வாக்காளர்கள் அனைவரும் சட்டமன்றத் தேர்தலில் 100 சதவீதம் தவறாமல் வாக்களிக்க வேண்டும்

## கலெக்டர் எம்.எஸ்.பிரசாந்த் தகவல்

கள்ளக்குறிச்சி, ஏப். 05–

கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் வட்டாரம், அ.பாண்டலம் கிராமத்தில் மகளிர் சுய உதவிக்குழுவினர் மூலம் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் 02.04.2026 அன்று நடைபெற்றது.

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 100 சதவீதம் வாக்குப்பதிவை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு துறைகளின் சார்பில் வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் சங்கராபுரம் வட்டாரம், அ.பாண்டலம் கிராமத்தில் மகளிர் சுய உதவிக்குழுவினர் மூலம் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ரங்கோலி வரைதல், உறுதிமொழி ஏற்பு உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வாக்காளர்களிடையே சட்டமன்றத் தேர்தல் 100 சதவீத வாக்குப்பதிவு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.



எனவே கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள வாக்காளர்கள் அனைவரும் சட்டமன்றத் தேர்தலில் 100 சதவீதம் தவறாமல் வாக்களித்து தங்களது ஜனநாயகக் கடமையினை நிறைவேற்ற வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் தெரிவித்தார்.

# கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வாக்குக்சாவடி அலுவலர்களுக்கு வாக்குப்பதிவு குறித்து நடைபெற்ற பயிற்சியை கலெக்டர் நேரில் பார்வையிட்டார்

கிருஷ்ணகிரி, ஏப். 05–

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 நடைபெறுவதை முன்னிட்டு, கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் பர்கூர் வட்டாட்சியர் அலுவலகம் ஆகிய அலுவலகங்களில் வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல் செய்யும் படிவங்கள் மற்றும் பாதுகாப்பு பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.





தொடர்ந்து, கிருஷ்ணகிரி, அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் சட்டமன்ற பொதுத் தேர்தலில் பணியாற்ற உள்ள வாக்குச்சாவடி நிலைய தலைமை அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி நிலை1, நிலை 2, நிலை3 அலுவலர்கள் ஆகிய முதற்கட்ட பயிற்சியில் கலந்துக்கொள்ளதா அலுவலர்களுக்கு நடைபெறும் பயிற்சி வகுப்புகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ்குமார் தெரிவித்ததாவது:

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026ல், கிருஷ்ணகிரிமாவட்டத்தில்தேர்தல் பணியில்ஈடுபடும் 10,040 வாக்குச்சாவடி நிலைய தலைமை அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி நிலை1, நிலை 2, நிலை3 அலுவலர்கள் தேர்தல் பயிற்சி வகுப்பில் கலந்துக்கொள்ள கணினி (First Randomization) மூலம் சுழற்சிமுறையில் தேர்வு செய்யப்பட்டு பணி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள 6 சட்டமன்ற தொகுதிகளான, 51ஊத்தங்கரை சட்டமன்ற தொகுதியில் 30 அலுவலர்களுக்கு ஊத்தங்கரை, அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியிலும், 52 பர்கூர் சட்டமன்ற தொகுதியில் 76 அலுவலர்களுக்கு பர்கூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியிலும், 53கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதியில் 194 அலுவலர்களுக்கு கிருஷ்ணகிரி, அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியிலும், 54வேப்பனஹள்ளி சட்டமன்ற தொகுதியில் 25 அலுவலர்களுக்கு சூளகிரி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியிலும், 55ஒசூர் சட்டமன்ற தொகுதியில் 347 அலுவலர்களுக்கு ஒசூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியிலும், 56தளி சட்டமன்ற தொகுதியில் 237 அலுவலர்களுக்கு தேன்கனிக்கோட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி என மொத்தம் 6 இடங்களில் வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள், வாக்குச்சாவடி நிலை 1, நிலை 2 மற்றும் நிலை3 அலுவலர்கள் என முதற்கட்ட பயிற்சியில் கலந்துக்கொள்ளதா 909 அலுவலர்களுக்கு மண்டல அலுவலர்கள், தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மூலம் பயிற்சி வழங்கப்பட்டது. பயிற்சியில் மாதிரி வாக்குச்சாவடி மையம் அமைத்து செயல்முறை விளக்கம் மற்றும் நியமனம் செய்யபட்ட அலுவலர்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்த விளக்கம் அளிக்கப்பட்டது. தேர்தல் நாளில் பயன்படுத்தப்படும் படிவங்களை நிரப்புவது குறித்த பயிற்சியும் அளிக்கப்பட்டது. எனவே, தேர்தல் பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டுள்ள அனைவரும் சிறப்பான முறையில் பயிற்சியினை பெற்று தமிழ்நாடு சட்டமன்றபொதுத் தேர்தல் 20268 அமைதியாகவும், பாதுகாப்புகாவும் நடத்திட முழு ஒத்துழைப்புவழங்கவேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார், தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது, தேர்தல் நடத்தும் அலுவலர்கள் ஷாஜகான்(53. கிருஷ்ணகிரி), அபிநயா (52.பர்கூர்), வட்டாட்சியர் சின்னசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.



கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதி பொதுப் பார்வையாளர் சுபஸ்ரீ நந்தா மணக்குடியில் செயல்பட்டு வந்த நிலையான கண்காணிப்பு குழுவை (04.04.2026) அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# அரசு பல்கலைக்கழகங்களில் மாணவர் சேர்க்கையை அதிகரிக்க வேண்டும்

## விஐடி வேந்தர் கோ.விசுவநாதன் கருத்து

வேலூர், ஏப். 05–

அரசு பல்கலைக்கழகங்களில் மாணவர் சேர்க்கையை அதிகரிக்க வேண்டும் என்று விஐடி வேந்தர் கோ.விசுவநாதன் கருத்து தெரிவித்தார்.



விஐடி பல்கலைக்கழகத்தில் பல்கலைக்கழக தினம், விளையாட்டு விழா நேற்று நடைபெற்றது. பதிவாளர் ஜெயபாரதி வரவேற்றார். துணை வேந்தர் காஞ்சனா பாஸ்கரன் ஆண்டறிக்கை வாசித்தார். விஐடி வேந்தர் கோ.விசுவநாதன் தலைமை வகித்து பேசியதாவது:

விஐடி பல்கலைக்கழகத்தில் அரசு பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்று 'ஸ்டார்ஸ்' திட்டத்தின் கீழ் இணைந்த மாணவர்கள், மற்ற மாணவர்களுக்கு இணையாகப் போட்டியிட்டுத் தரவரிசைப் பட்டியலில் இடம் பெற்றுள்ளது பாராட்டுக்குரியது.

இந்த ஆண்டில் இது வரை வேலைவாய்ப்புகளில் 10,000 பணி ஆணைகளை பெற்றுள்ளனர். கடந்த ஆண்டில் 1000 நிறுவனங்கள் பங்கேற்று 14,000 மாணவர்கள் பணி ஆணை பெற்றுள்ளனர். மாணவர்களின் வருகைப் பதிவு என்பது வெறும் வகுப்பறையில் அமர்வது மட்டுமல்ல, அது ஒரு மாணவனின் ஒழுக்கத்தையும் அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்துகிறது. மாணவர்களுக்கு ஆசிரியர்கள் முன்மாதிரியாக திகழ வேண்டும்.

ஒருகல்விநிறுவனத்தின் வெற்றியில் 90 சதவீத பங்கு ஆசிரியர்களையே சாரும். மீதமுள்ள 10 சதவீதம் மட்டுமே நிர்வாகம் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளாகும்.

ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையிலான உறவை மேம்படுத்த 'ப்ராக்டர் சிஸ்டம்' இன்னும் முழுமையாகச் செயல்படுத்தப்பட வேண்டும். கல்விக்கு மத்திய, மாநில அரசுகள் அதிகம் செலவிட வேண்டும். ஓ.இ.சி.டி. நாடுகள் கல்விக்கு தனி நபருக்கு 20,500 டாலர்களை செலவிடுகிறது. மேற்கத்திய நாடுகள் 15,000 முதல் 25,000 டாலர்களை செலவிடுகிறது. சீனா 17,700 டாலர்களையும், இந்தியா 266 டாலர்களை மட்டுமே செலவிடுகிறது.

சீனா கடந்த ஆண்டில் கல்விக்கு 800 பில்லியன் டாலர்களையும், இந்தியா 12 பில்லியன் டாலர் அளவுக்கு நிதி ஒதுக்கியுள்ளது.

மக்கள் தொகையில் சீனாவை விஞ்சி உள்ளோம். கல்வியில் முன்னேறாமல் இந்தியா உலக தலைவராக மாற முடியாது.

உலகெங்கும் வாழும் இந்தியர்கள் தங்கள் சொந்த நாட்டுக்கு ரூ.12 லட்சம் கோடி வரை அனுப்பி உள்ளனர். இதில் மகாராஷ்டிரம், கேரளம், தமிழகம் ஆகிய மூன்று மாநிலங்கள் முதல் இடத்தில் உள்ளன. மீதமுள்ள 25 மாநிலங்கள் 50 சதவீத தொகையை பகிர்ந்து கொள்கின்றன.

கல்விக்காக அதிக நிதி ஒதுக்குவது மாநில மற்றும் மத்திய அரசுகளின் கடமையாகும். சில பல்கலைக்கழகங்கள் நிதிச் சுமையைக் கருதி மாணவர் சேர்க்கையைக் குறைக்கின்றன.

தமிழ்நாட்டில் உள்ள 22 பல்கலைக்கழகங்களில், இரண்டில் மட்டுமே 10,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயில்கின்றனர். அரசு பல்கலைக்கழகங்களில் மாணவர் சேர்க்கையை அதிகரிக்க வேண்டும். அப்போதுதான் நடுத்தர மற்றும் ஏழை எளிய மாணவர்கள் எளிதாகக் கல்வி கற்க முடியும். தனியார் கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களுக்கும் அரசு ஏதேனும் ஒரு நிதி உதவித் திட்டத்தை வகுக்க வேண்டும்.சீனாபோன்றவளர்ந்த நாடுகளைப் போல இந்தியா வளர வேண்டுமெனில் கல்விக்கான பட்ஜெட்டை உயர்த்தினால் மட்டுமே இது சாத்தியமாகும்.

இன்றைய விழாவில் சுமார் 3,800 மாணவர்கள் பதக்கங்களும், விருதுகளும் பெறுகின்றனர். மேலும், ரூ.2.23 கோடி மதிப்பிலான நிதி உதவிகள் வழங்கப்படுகின்றன.

இவ்வாறு அவர் பேசினார்.

வேலூர் கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி இயக்குநர் பிஜு ஜார்ஜ் சிறப்பு விருந்தினராகக்கலந்துகொண்டு பேசும்போது, "மாணவர்கள் தொடர்ந்து கற்க வேண்டும். இது பொறியியல் உள்ளிட்ட அனைத்து துறைகளுக்கும் பொருந்தும். கல்வி என்பது வாழ்நாள் முழுவதும் தொடர வேண்டிய ஒரு பயிற்சியாகும். மாணவர்களுக்கு ஒவ்வொரு சவாலும் ஒரு புதிய கண்டுபிடிப்புக்கான வாய்ப்பு என்பதை நினைவில் கொள்ள வேண்டும். மாணவர்களுக்கு கற்பதற்கான ஆர்வம், அறநெறி பொறுப்பு, தொடர் கற்றல், சமூகப் பொறுப்பு என்ற நான்கு விதமான பண்புகள் இருக்க வேண்டும்" என்றார்.

கவுரவ விருந்தினராக, ஸ்டேட்டிக் நிறுவனத்தின் இணை நிறுவனர் ராகவ் அரோரா கலந்து கொண்டு பேசினார். முன்னதாக ஸ்டேட்டிக் நிறுவனத்துடன், விஐடி பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது. நிகழ்வில் விஐடி பல்கலைக்கழகத்தின் துறை வாரியாக முதல் ரேங்க் பெற்ற மாணவர்கள் விருது வழங்கி கவுரவிக்கப்பட்டனர். மேலும், விளையாட்டு துறையில் சாதித்தவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. தொடர்ந்து மாணவர்களுக்கு ராஜேஸ்வரி விசுவநாதன் நினைவு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது. வேந்தர் சிறப்பு விருதுகள், வேந்தர் தங்க விருதுகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் துணை தலைவர்கள்சங்கர்விசுவநாதன், சேகர்விசுவநாதன், செயல் இயக்குநர் சந்தியா பென்டாரெட்டி, ரமணி பாலசுந்தரம், உதவி துணை தலைவர் காதம்பரி எஸ். விசுவநாதன், இணை துணைவேந்தர் பார்த்தசாரதி மல்லிக், பதிவாளர் ஜெயபாரதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வாக்குச்சாவடிகளை கண்காணித்திட நுண்பார்வையாளர்கள் கணினி மூலம் பகுப்பாய்வு செய்யும் பணி

## கடலூர் கலெக்டர் தலைமையில் தொடங்கி வைத்தார்

கடலூர், ஏப். 05–

கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கணிணி அறையில், சட்டமன்ற பொதுத்தேர்தல்2026ஐ முன்னிட்டு வாக்குச்சாவடிகளை கண்காணிக்க நுண்பார்வையாளர்கள் கணிணி மூலம் பகுப்பாய்வு செய்யும் பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தேர்தல் பொது பார்வையாளர்கள் குஹா பூனம் தபஸ், பிரீத்தி ஜெயின்,அசிதா மிஸ்ரா ஆகியோர்தலைமையில் தொடங்கிவைத்தார்.

இதுகுறித்து மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார்தெரிவித்ததாவது:




இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவின்படி, 2026,சட்டமன்ற பொதுத் தேர்தல் வாக்குப்பதிவு 23.04.2026 அன்று நடைபெறவுள்ளது. வாக்குப்பதிவிற்கு தேவையான அனைத்து முன்னேற்பாடு மற்றும் பாதுப்பு பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன்படி, தேர்தலை நியாயமான முறையில் நடத்திடும் பொருட்டு 151 திட்டக்குடி சட்டமன்ற தொகுதியில் 6 வாக்குச்சாவடி மையங்களும், 152விருத்தாசலம் சட்டமன்ற தொகுதியில் 12 வாக்குச்சாவடி மையங்களும், 153 நெய்வேலி சட்டமன்ற தொகுதியில் 12 வாக்குச்சாவடி மையங்களும், 154 பண்ருட்டி சட்டமன்ற தொகுதியில் 3 வாக்குச்சாவடி மையங்களும், 155 கடலூர் சட்டமன்ற தொகுதியில் 9 வாக்குச்சாவடி மையங்களும், 156 குறிஞ்சிப்பாடி சட்டமன்ற தொகுதியில் 8 வாக்குச்சாவடி மையங்களும், 157புவனகிரி சட்டமன்ற தொகுதியில் 14 வாக்குச்சாவடிமையங்களும், 158சிதம்பரம் சட்டமன்ற தொகுதியில் 6 வாக்குச்சாவடி மையங்களும், 159 காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற தொகுதியில் 12 வாக்குச்சாவடி மையங்களும் என 9 சட்டமன்ற தொகுதிகளிலும் 82 வாக்குச்சாவடி மையங்கள் நுண்பார்வையாளர்களால் கண்காணிக்கப்படவுள்ளது.

வாக்குச்சாவடி மையங்களை கண்காணித்திட மையத்திற்கு ஒரு நுண்பார்வையாளர் என 82 நபர்களுடன் மேலும் 20 சதவீதம் இருப்புடன் 98 நுண்பார்வையாளர்கள் கணிணி மூலம் ஒதுக்கீடு செய்யும் பணி தொடங்கிவைக்கப்பட்டது.

அனைத்து வாக்குச்சாவடிகளிலும் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டு கண்காணிக்கப்படும், நுண்பார்வையாளர்கள் வாக்குச்சாவடி மையங்களில் நடப்பவைகளை கண்காணித்து, நேரடியாக தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு தகவல் அளித்து வாக்குப்பதிவு சீரான முறையில் நடைபெறுவதை உறுதி செய்திட வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் புண்ணியகோட்டி, மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) திருநாவுக்கரசு உட்பட அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2026 முன்னிட்டு,
# வேட்புமனு தாக்கல் மற்றும் தேர்தல் பணிகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு



விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் வட்டாட்சியர்அலுவலகத்தில்அன்று (02.04.2026) தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2026 முன்னிட்டு, வேட்புமனு தாக்கல் மற்றும் தேர்தல் பணிகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் .என்.ஓ.சுகபுத்ரா, நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2026 முன்னிட்டு, மாவட்டத்தில் உள்ள 7 சட்டமன்ற தொகுதிகளிலும் 30.03.2026 (திங்கட்கிழமை) முதல் 06.04.2026 (திங்கட்கிழமை) வரை காலை 11 மணி முதல் மாலை 3 மணி வரை வேட்புமனு தாக்கல் நடைபெறுகிறது. அந்த வகையில், திருவில்லிபுத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் வேட்புமனு தாக்கல் மற்றும் தேர்தல் பணிகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித்தலைவர் .என்.ஓ. சுகபுத்ரா, நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். மாவட்டத்தில் 30.03.2026 (திங்கட்கிழமை) முதல் 06.04.2026 (திங்கட்கிழமை) வரை காலை 11 மணி முதல் மாலை 3 மணி வரை வேட்புமனு தாக்கல் செய்யலாம்.

1881ஆம் ஆண்டு செலாவணி முறிச்சட்ட த்தின்கீழ், பொது விடுமுறையாக அரசால் அறிவிக்கப்பட்டுள்ள 31.03.2026 (செவ்வாய்க்கிழமை), 01.04.2026 (புதன் கிழமை), 03.04.2026 (வெள்ளிக்கிழமை) மற்றும் 05.04.2026 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நாட்களில் வேட்புமனு தாக்கல் செய்ய இயலாது.

வேட்பு மனுக்கள் தாக்கல் செய்ய கடைசி நாள் 06.04.2026 (திங்கட்கிழமை) என மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித்தலைவர் .என்.ஓ.சுகபுத்ரா, தெரிவித்தார்.

இந்நிகழ்வில் திருவில்லிபுத்தூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர்/உதவி ஆணையர்(கலால்) .டி.வி.ரமேஷ், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள், தேர்தல் பிரிவு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





மதுரை மாநகர் கண்ணனேந்தல் செந்தில் நகர் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோவில் 10ம் ஆண்டு வருடாபிஷேக விழாவை முன்னிட்டு சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க யாகசாலை பூஜைகள் நடைபெற்றன தொடர்ந்து சுவாமிக்கு விசேஷ அலங்காரம் செய்யப்பட்டு சிறப்பு பூஜைகளும் தீபாரதனைகளும் நடைபெற்றன.இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர் அதனைத் தொடர்ந்து பொதுமக்களுக்கு மாபெரும் அன்னதானம் வழங்கப்பட்டது நிகழ்ச்சி ஏற்பாடுகளை விழா குழுவினர்கள் சிறப்பாக செய்திருந்தனர். மதுரை மாநகர் ஆத்திகுளம் குறிஞ்சி நகர் தேவர் காலனி எல்லையில் அமைந்துள்ள 108 ஆண்டுகள் பழமை வாய்ந்த ஸ்ரீ முனீஸ்வரர் திருக்கோவில் ஆண்டு உற்சவ விழாவை முன்னிட்டு சாமிக்கு பால்குடம் அபிஷேகம் மாலை ஊர்வலம் நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து மாபெரும் அன்னதானம் நடைபெற்றது இதில் பொதுமக்கள் பக்தர்கள் பலர் கலந்து கொண்டனர் நிகழ்ச்சி ஏற்பாடுகளை கார்த்திகேயன் மற்றும் சுரேஷ்குமார் செந்தில்குமார் உட்பட விழா குழுவினர்கள் சிறப்பாக செய்திருந்தனர்





மதுரை முனிச்சாலை ரோடு இஸ்மாயில்புரம் 4வது தெருவில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் ஸ்ரீ முனிஸ்வரர் திருக்கோவில் 125 வது ஆண்டு பங்குனி உற்சவ விழாவை முன்னிட்டு முக்கிய நிகழ்ச்சியான உலக நன்மை வேண்டியும் மழை பெய்ய வேண்டியும் செழிக்கவும் திருவிளக்கு பூஜை நடைபெற்றது. இந்நிகழ்வில் தலைவர் மதயானை செயலாளர் தர்மராஜ் பொருளாளர் முத்துவேல் உட்பட விழா குழுவினர்கள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர். மதுரை மாநகர் தெற்குவாசல்சின்னகடைவீதிவைக்கோல்காரதெருபகுதியில்அமைந்துள்ளஸ்ரீகிருஷ்ணவிலாசபலிஜசபாசௌகார்பட்டி ஸ்ரீ காளியம்மன் மாரியம்மன் கருப்பணசாமி ஸ்ரீ குருநாதசுவாமி திருக்கோவில் ஆண்டு உற்சவ விழாவை முன்னிட்டு நடைபெற்ற திருவிளக்கு பூஜையில் பெண்கள் பலர் கலந்துகொண்டு திருவிளக்கு ஏற்றி தரிசனம் செய்தனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை விழா குழுவினர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.விழா ஏற்பாடுகளை தலைவர் ராதாகிருஷ்ணன் செயலாளர் கண்ணன் துணைத்தலைவர் சீனிவாசன் பொருளாளர் சம்பத்குமார் இணைச் செயலாளர்கள் திருப்பதி தலைமையில் விழா குழுவினர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி மயிலம் சட்டமன்ற தொகுதியின் சார்பில் 03.04.2026 அன்று தீவனூர் தனியார் திருமணமண்டபத்தில். 2026 சட்டமன்ற தேர்தல் காங்கிரஸ் பொருப்பாளர்கள் வழக்கறிஞர் செ.சிவா மற்றும் முப்புளி,கோவிந்தன் ஆகியோர் ஏற்பாடுகளின்படி வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் செயல்வீரர்கள் கூட்டம் மாவட்ட தலைவர் கல்வியாளர்,ரங்கபூபதி, தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திராவிட முன்னேற்ற கழக மாவட்ட செயலாளரும் முன்னால் அமைச்சரும் செஞ்சி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான்,மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வெற்றி வேட்பாளர் எல்.வெங்கடேசனை, ஆதரித்து முரசு சின்னத்தில் வாக்குகள் பெறுவதற்கு காங்கிரஸ்கட்சி வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் செயல்வீரர்களாகிய உங்களின் கடின பிரச்சாரத்தினால் முரசு சின்னத்தில் பெருவாரியான வாக்குகள் பெற்று மயிலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினரான எல். வெங்கடேசனை, வெற்றி பெறச்செய்யுமாறு கேட்டுக்கொண்டார்,மேலும் காங்கிரஸ் விவசாய அணி மாவட்டதலைவர் அகலூர் அ. ஜோலாதாஸ் ஏற்பாடுகளின்படி மாற்று கட்சியிலிருந்து மாவட்டதலைவர் ரங்கபூபதி, தலைமையில் தொண்டூர் ச.ஆறுமுகத்தை காங்கிரஸ் கட்சியில் இணைத்து வாழ்த்து தெரிவித்தார். தி.மு.க.பிரமுகர்கள் மற்றும் காங்கிரஸ் மாவட்ட, வட்டார, ஊராட்சி, தலைவர்கள் உள்ளிட்ட,வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் செயல்வீரர்கள் பெருந்திரளாக கலந்துகொண்டு சிறப்பித்தனர்,மயிலம் வடக்கு வட்டார பொருப்பாளர் கணேசன் நன்றி தெரிவித்தார்.






தஞ்சை புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள ஓட்டல் ராக்ஸ் விடுதியில் தஞ்சாவூர் சட்டமன்ற தொகுதி பாஜக மாநில, மாவட்ட, பகுதி நிர்வாகிகள் மற்றும் சக்தி கேந்திரா பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நேற்று காலை நடந்தது. கூட்டத்திற்கு தெற்கு மாவட்டத் தலைவர் ஜெய் சதீஸ் தலைமை தாங்கினார். சட்டமன்றத் தொகுதி இணை அமைப்பாளரும் பாஜக மாநில செயற்குழு உறுப்பினருமான உமாபதி முன்னிலை வகித்தார். கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக பாஜக மாநில பொதுச்செயலாளரும், திருச்சி பெருங்கோட்ட பொறுப்பாளருமான கருப்பு. முருகானந்தம் கலந்து கொண்டு தேர்தல் பிரச்சாரம் மற்றும் வாக்கு சேகரிப்பு போன்ற பணிகள் குறித்து கட்சியினருக்கு ஆலோசனைகள் வழங்கினார். மேலும் தஞ்சாவூர் சட்டமன்ற மேலிடப் பார்வையாளரும் கர்நாடக மாநில ஊடகப் பொறுப்பாளருமான கருணார் கார்ஸ்லே கலந்து கொண்டுகட்சியினர்தேர்தலில்வேட்பாளர்அமோகவாக்குகள்வித்தியாசத்தில்வெற்றிபெறஆலோசனைகள்வழங்கினார். கூட்டத்தில் மாநில என்ஜிஓ பிரிவு தலைவர் ராஜேஸ்வரன், மாநில நிர்வாகிகள் தங்க. கதிரவன், கபிலன், பால செல்வம், தஞ்சாவூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் கர்ணன், முன்னாள் சட்டமன்ற பார்வையாளர் யுனிவர்சல் ரெங்கராஜன் மாவட்ட துணைத் தலைவர்கள் அம்ரீத்அரசன், மதி துரைமுருகன், விசாலாட்சி மாவட்ட இளைஞர் அணி தலைவர் பாலாஜி மாவட்ட விவசாய அணி தலைவர் கரம்பயம் தங்கவேல் மேற்கு மாநகர தலைவர் மாயாதேவி, மகளிர் அணி சாய் லெட்சுமி, சந்தான லட்சுமி, லதா, வேங்கலெட்சுமி மற்றும் பலர் கலந்து கொண்டனர் .

# விருதுநகரில் தேர்தல் விதிமீறல்;அனுமதியின்றி வைக்கப்பட்ட 3 விளம்பரப் பலகைகள் அகற்றம்
## தேர்தல் மேற்பார்வையாளர் நடவடிக்கை





206 விருதுநகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட விருதுநகர் நகராட்சிப் பகுதியில், தேர்தல் நடத்தை விதிமுறை களை மீறி வைக்கப்பட்டிருந்த விளம்பரப் பலகைகளைத் தேர்தல் அலுவலர்கள் அதிரடியாக அகற்றினர்.

விருதுநகர் தெப்பக்குளம் அருகே அமைந்துள்ள பராசக்தி மாரியம்மன் கோவில் பங்குனிப் பொங்கல் திருவிழா வை முன்னிட்டு, தேர்தல் விதிமுறைகளை மீறி மூன்று விளம்பரப் பலகைகள் (Flex Banners) வைக்கப்பட்டிருப்பதாக 206விருதுநகர் சட்டமன்றத் தொகுதித் தேர்தல் மேற்பார்வையாளர்நவ்நீத்குமாருக்கு புகார் வரப்பெற்றது. அப்புகாரின் அடிப்படையில், தேர்தல் மேற்பார்வையாளரின் நேரடி அறிவுறுத்தலின் படி, குறிப்பிட்ட அந்த மூன்று விளம்பரப் பலகைகளும் உடனடியாக அகற்றப்பட்டன.தேர்தல் மேற்பார்வையாளர் எச்சரிக்கை. இது குறித்துத் தேர்தல் மே ற்பார்வையாளர் . நவ்நீத்குமார், தெரிவிக்கையில்:

"அரசியல் தொடர்பான விளம்பரப் பலகைகள் அல்லது பதாதைகளை உரிய அனுமதி பெறாமல் வைப்பதுதேர்தல்நடத்தை விதிமுறைகளின்படி குற்றமாகும். விதிமுறைகளை மீறிச் செயல்படுபவர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்," என தெரிவித்தார்.

## இராஜபாளையம் வட்டாட்சியர் அலுவலகத்தில்
# வேட்புமனு தாக்கல் பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் ஆய்வு



தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் 2026ஐ முன்னிட்டு, விருதுநகர் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் தேர்தல் பணிகள் மற்றும் வேட்புமனு தாக்கல் நடைமுறைகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் என்.ஓ. சுகபுத்ரா, அன்று (04.04.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வு மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள்:

இராஜபாளையம் வட்டாட்சியர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள வேட்புமனு தாக்கல் மையத்தைப் பார்வையிட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், அங்கு வேட்பாளர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள், போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் கண்காணிப்பு கேமராக்களின் (CCTV) செயல்பாடுகள் குறித்து விரிவாக ஆய்வு செய்தார். வேட்புமனு தாக்கல் செய்ய வரும் வேட்பாளர்களுடன் அனுமதிக்கப்படும் நபர்களின் எண்ணிக்கை மற்றும் 100 மீட்டர் எல்லைக்குள் வாகனக் கட்டுப்பாடு குறித்த இந்தியத் தேர்தல் ஆணையத்தின் விதிகளைத் துல்லியமாகப் பின்பற்ற வேண்டுமென அங்கிருந்த அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார். வேட்புமனு தாக்கல் குறித்த முக்கியத் தகவல்கள்: மாவட்டத்தில் உள்ள 7 சட்டமன்றத் தொகுதிகளிலும் கடந்த 30.03.2026 (திங்கட்கிழமை) அன்று வேட்புமனு தாக்கல் தொ டங்கியது. இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது:

வேட்புமனு தாக்கல்: வரும் 06.04.2026 (திங்கட்கிழமை) மாலை 3 மணி வரை வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யலாம்.நேரம்: வேலை நாட்களில் காலை 11:00 மணி முதல் மாலை 03:00 மணி வரை மட்டுமே மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விடுமுறை நாட்கள்: பொது விடுமுறை நாட்களாக அறிவிக்கப்பட்டுள்ள 31.03.2026 (செவ்வாய்), 01.04.2026 (புதன்), 03.04.2026 (வெள்ளி) மற்றும் 05.04.2026 (ஞாயிறு) ஆகிய நாட்களில் வேட்புமனுக்கள் பெறப்படமாட்டாது. இறுதி நாள்: வேட்புமனு தாக்கல் செய்ய கடைசி நாள் 06.04.2026 ஆகும். அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்: தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்களை எவ்வித தொய்வுமின்றிப் பின்பற்ற வேண்டும் என்றும், வேட்புமனு தாக்கலின் போது தேவையற்ற கூட்டத்தைத் தவிர்க்கவும், போதிய காவல்துறை பாதுகாப்பு இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் உத்தரவிட்டார்.

இந்நிகழ்வின் போது, இராஜபாளையம் சட்டமன்றத் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர், வட்டாட்சியர் மற்றும் தேர்தல் பிரிவு அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJAV. CALL: 044-22772060,9443699066